வெளியீட்டுக்குரியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 143/2022

உத்தராகண்ட் மாநில அரசு ... மேல்முறையீட்டாளர்

எதிர்

சசேந்திர சிங் ராவத் ... எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா:

1. குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2016-இல் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக்குற்றமாகாது என்றும், அதனையடுத்து ஆயுட்கால சிறைத் தண்டனையிலிருந்து பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையாக மாற்றி, எதிர்மேல்முறையீட்டாளரான எதிரியால் முன்கொணரப்பட்ட மேற்படி மேல்முறையீட்டை அனுமதித்து, நைனிடாலிலுள்ள உத்தரகாண்ட் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 11/12/2018-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவால் திருப்தியடையாமல் மனக்குறையுற்று, உத்தரகாண்ட் மாநில அரசு இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளது.

2. இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளரான அசல் வழக்கு எதிரி, வீரேந்திர சிங் என்பவரைக் கொலைபுரிந்த குற்றத்திற்காக இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம்புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார். அரசுத்தரப்பு வழக்கின்படி, 26.11.2014 அன்று ஒட்டுமொத்த கிராமமும் அனில் என்பவரின் திருமண நிகழ்ச்சியில் மெகந்தி சடங்கினைக் கொண்டாடிக் கொண்டிருந்தது. அச்சடங்கில் இறந்துபோன வீரேந்திர சிங் மற்றும் எதிரி சச்சேந்திர சிங் ராவத் உட்பட ஒட்டுமொத்த

கிராமமும் பங்கெடுத்தது.இறந்துபோன வீரேந்திர சிங்குக்கும், எதிரி சச்சேந்திர சிங் ராவத்துக்குமிடையே இரவில் ஏதோ வாய்ச்சண்டை நடந்தது. கிராமத்தினரின் தலையீட்டால் அந்த விடயம் மேற்செல்லாமல் நின்றுபோனது.இரவு உணவுக்குப் பின்னர், நடு இரவில் சுமார் 12.00 மணியளவில், எதிரி தன் கையில் வைத்திருந்த " கட்டை/உருட்டுக் கட்டை"யான சாதாரண மரக்கட்டையால் வீரேந்திர சிங்கை தாக்கினார். இறந்துபோனவரின் தலையின்மீது அந்தத் தாக்குதல் விழுந்தது. வீரேந்திர சிங் தன்னைக் காத்துக்கொள்ள தனது வீட்டை நோக்கி ஓடினார்.எதிரி தனது கையில் " உருட்டுக்கட்டையைத் "தூக்கிக்கொண்டு இறந்துபோனவரின் பின்னால் ஓடினார். இறந்துபோனவர் தலையில் பல காயங்கள் அடைந்தார்.மண்டை ஓடு உடைந்ததோடு இடதுபுற நெற்றியில் காயம் ஏற்பட்டது. இறந்துபோனவரின் மனைவியான முறையீட்டாளர் தனது கணவரை காப்பாற்ற முயன்று அதில் தோல்வியடைந்தார். இதற்கிடையில் அவரது கணவர் மீது பலவிதமான தாக்குதல்கள் நடந்தன. முறையீட்டாளரின் மாமியாரான கீதாதேவியும் இறந்துபோனவரை காப்பாற்றுவதற்காக வந்தார். கடுமையான காயங்களின் காரணமாக வீரேந்திர சிங் மயக்கமடைந்தார். இறந்துபோனவர், முதலில் சிறிது தூரத்திலிருந்த கன்சாலியில் வசித்துவந்த மருத்துவர் ஷர்மாவிடம் கொண்டுசெல்லப்பட்டார். காயமடைந்தவரின் நிலைமையை ஆராய்ந்து, அவரை டேராடுனில் உள்ள மகந்த இந்த்ரேஷ் மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல பரிந்துரைக்கப்பட்டது, அங்கு அவருக்கு அறுவை சிகிச்சையளிக்கப்பட்டது. சிறிது நாட்கள் கழித்து, அதாவது 5.12.2014 அன்று வீரேந்திர சிங் இறந்துவிட்டார்.

2.1. இறந்துபோனவரின் மனைவி, இதிலுள்ள எதிரியான எதிர்மேல் முறையீட்டாளருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தார்.காவல் நிலையப் பொறுப்புக் காவல் அலுவலரால் புலனாய்வு நடத்தப்பட்டது. புலனாய்வின்போது, புலனாய்வு அதிகாரி, இறந்துபோனவரின் மனைவியான முறையீட்டாளர் உள்ளிட்ட கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார். புலனாய்வு அதிகாரி, சடலக் கூறாய்வு அறிக்கை உள்ளிட்ட மருத்துவச் சான்று போன்ற இன்னபிறவற்றையும் சேகரித்தார், அதன்பின், புலனாய்வு முடிந்ததன்பேரில், புலனாய்வு அதிகாரி, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக எதிரிக்கு எதிராக குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்தார். இவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால், எதிரியை விசாரணை

செய்யக்கூடிய அமர்வு நீதிமன்றத்திடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டது.எதிரி குற்றமற்றவர் என்றும், அவர் இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக விசாரணை நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் கோரினார்.

2.2. எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசுத்தரப்பு அனைத்து 14 சாட்சிகளையும் விசாரித்தது. இறந்துபோனவரின் மனைவியான முறையீட்டாளர் உள்ளிட்ட சாட்சிகளில் பலரும் கண்ணுற்ற சாட்சிகளாவர். இறந்தவருக்கு அறுவை சிகிச்சை செய்தவரான அ.சா.11-மருத்துவர் பங்கஜ் அரோராவையும் அரசுத்தரப்பு விசாரித்தது. அரசுத் தரப்பில் சாட்சியமளிப்பு முடிவடைந்தபின், மேற்கொண்டு கு.ந.ச., பிரிவு 313-இன் கீழ் எதிரியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன்பிறகு, சாட்சியத்தின் மதிப்பீட்டின் பேரிலும், கண்ணுற்ற சாட்சிகளான இறந்துபோனவரின் மனைவியான தர்ஷினி தேவி மற்றும் பல நபர்களின் சாட்சியத்தின் நம்பிக்கையின் பேரிலும், இறந்துபோனவரால் அடையப்பெற்ற காயங்களின் தன்மையைப் பரிசீலித்தும், மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக்குற்றமாக இருந்தது, ஆதலால், இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக எதிரியைத் தண்டித்து, ஆயுள் சிறைத்தண்டனையை விதித்து விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.

2.3. விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தண்டனை உத்தரவுடனும், தீர்ப்புரையுடனும் திருப்தி யடையாமல் மனக்குறையுற்று, எதிரி, உயர் நீதிமன்றத்தில் குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2016-ஐ தாக்கல் செய்தார். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின்படி, இறந்துபோனவரின் மனைவியான அ.சா.1 உள்ளிட்ட அனைத்து கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தை உயர் நீதிமன்றம் நம்பியபோதிலும், இது ஒரு கொடூரமான கொலை அல்ல என்ற ஒரே காரணத்தின்பேரில் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக்குற்றமாகாது என்றும், மேலும் இது, இருவருக்குமிடையே உணர்ச்சிவேகத்தில் தொடங்கிய திடீர்ச் சண்டை என்றும், அதன்விளைவாக திருமணச் சடங்கில் ஒரு திடீர்ச் சண்டை ஏற்பட்டது என்றும், ஒரு சாதாரண மரத்துண்டான "உருட்டுக்கட்டை" என்பது ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது என்றும், ஆகையால், இறந்துபோனவரைக் கொல்ல மற்றும்/அல்லது கொலைபுரியும் எண்ணம் ஏதும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் இருந்தது என்று கூறப்பட இயலாது

என்றும், ஆதலால், இவ்வழக்கு இ.த.ச., பிரிவு 300-க்கான 4-ஆவது விலக்குக் கூறின் கீழ் வரக்கூடியது என்றும் தீர்மானித்துள்ளது. அவ்வாறு தீர்மானித்த பின், மேலும், கொலையை, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக்குற்றமாகாது என்ற ஒன்றாக மாற்றிய முடிவுக்குப் பின், உயர் நீதிமன்றம் ஆயுள் சிறைத் தண்டனையை 10 ஆண்டுகால கடுங்காவல் தண்டனையாக மாற்றிவிட்டது.

2.4. உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பூரை மற்றும் உத்தரவில் திருப்தியடையாமல், மனக்குறையுற்று, மாநில அரசு இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளது.

3. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி இறந்தவரின் கொலை, மரணம் விளைவிக்கும் கொலைக் குற்றமாகாது எனத் தீர்மானித்ததில் உயர் நீதிமன்றம் பெரும் பிழைபுரிந்துவிட்டது என மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வீரேந்திர ராவத் கடுமையாக வாதிட்டுள்ளார்.

3.1. வழக்கு, இ.த.ச., பிரிவு 300-இன் 4-ஆவது விலக்குக்கூறுக்குள் வருகிறது எனக் கருத்துரைத்து, தீர்மானித்ததில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.2. பயன்படுத்தப்பட்ட ஆயுதம் "உருட்டுக்கட்டை" என்பதாலேயே, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என மாநில அரசு சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் கடுமையாக வாதிடப் பட்டுள்ளது.உடலில் முக்கியப் பகுதியான தலையில் திரும்பத் திரும்ப தாக்கப்பட்டதால், இறந்துபோனவர் பற்பல காயங்கள் அடைந்தார், இது அவரது மரணத்துக்கு வழிகோலியது என்பதை உயர் நீதிமன்றம் முறையாக மதிப்பிட்டு பரிசீலித்திருக்கவில்லை என்றும் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

3.3. மேலும், திருமணச் சடங்கு நடந்த இடத்தில் முதல் சம்பவமான சண்டை இருவருக்குமிடையே நடந்தது, கிராமத்தினரின் தலையீட்டிற்குப் பின், அவ்விடயம் மேற்கொண்டு போகவில்லை; எனினும், நடு இரவில் சுமார் 12.00 மணியளவில், எதிரி தான் வைத்திருந்த "உருட்டுக் கட்டையால்" இறந்துபோனவரைத் தாக்கினார், இறந்துபோனவர் பாதுகாப்புக்காக தனது வீட்டை நோக்கி ஓடியபோது,

குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருக்குப் பின்னால் ஓடி அவரது வீட்டிற்குச் சென்று தொடர்ந்து பலவாறாகத் தாக்கினார் என்றும் வாதிடப்பட்டுள்ளது.ஆகவே, இவ்வழக்கு ஒரு திடீர்ச் சண்டையின் விளைவானது, மேலும், மெகந்தி சடங்கில் ஏற்பட்ட திடீர்ச் சண்டையின் காரணமாக நடந்துள்ளதால், முன் ஆலோசனை ஏதுமில்லை என்பதால், இது இ.த.ச., பிரிவு 300-இன் நான்காவது விலக்குக் கூறுக்குள் வராது என உயர் நீதிமன்றம் கருத்துரைத்து, தீர்மானித்ததில் தவறிழைத்துவிட்டது என்றும் வாதிடப்பட்டுள்ளது.

3.4. இறந்தவரைத் தாக்கியது என்ற முக்கிய சம்பவம், மெகந்தி சடங்கில் நடந்த வாய்ச்சண்டையான முதல் சம்பவத்தைத் தொடர்ந்து நடந்ததாகும் என்று வாதிடப்பட்டுள்ளது. மெகந்தி சடங்கில் உணர்ச்சிவேகத்தில் திடீரென ஏற்பட்ட சண்டையில் அச்சம்பவம் நடந்தது என்பதை ஒருசிறிதும் கற்பனைக்கு இடங்கொடாது சொல்லலாம் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

3.5. மேலும், இறந்தவரின் தலையில் ஏற்பட்ட பற்பல கொடுங்காயங்கள் குறித்து உயர் நீதிமன்றம் பரிசீலித்திருக்கவேயில்லை என்றும் வாதிடப்பட்டுள்ளது. மண்டையோட்டில் முறிவும், இடதுபுற நெற்றியில் காயமும், தலை ஓட்டின் முன் முகட்டெலும்பையும் பின் முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்து வரை 34 தையல்களுடன் இடதுபுற மண்டையோட்டின் காயங்கள் இடதுபுற மண்டையோட்டின் நடுப்பகுதி வரை 16 செ.மீ. அளவில் நீண்டிருந்தது, அந்த அளவுக்கு விசைவேகத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் "உருட்டுக்கட்டையைப்" பயன்படுத்தி இருந்ததாகவும் வாதிடப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வழக்கு நிச்சயமாக இ.த.ச., பிரிவு 300-இன் மூன்றாவது மற்றும் நான்காவது விலக்குக்கூறுகளின் கீழ்தான் வரும் என்பதால் விசாரணை நீதிமன்றம், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக எதிரிக்கு சரியாகவே தண்டனைத் தீர்ப்பிட்டது என வாதிடப்பட்டுள்ளது.

3.6. மேற்படி வாதங்களுக்கு ஆதரவாக, மாநில அரசு சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், *ஸ்டாலின் -எதிர்- மாநில அரசு, (2020) 9 எஸ்.சி.சி. 524* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவின்மீது அதிகமாகச் சார்ந்துநின்றது, இதில் இந்நீதிமன்றம், இக்கூறின்பேரில் *மகேஷ் பால்மீகி -எதிர்- மத்தியப் பிரதேச மாநில அரசு, (2000) 1 எஸ்.சி.சி. 319; தீரஜ் பாய் கோரக்பாய் நாயக் -எதிர்- குஜராத் மாநில*

அரசு, (2003) 9 எஸ்.சி.சி. 322; புலிசேர்ல நாகராஜமி -எதிர்- ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (2006) 11 எஸ்.சி.சி. 444; சிங்கபாகு அஞ்சய்யா -எதிர்- ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (2010) 9 எஸ்.சி.சி. 799; இராஜஸ்தான் மாநில அரசு -எதிர்-கன்ஹய்யா லால், (2019) 5 எஸ்.சி.சி. 639; அருண் ராஜ் -எதிர்- யூனியன் ஆஃப் இந்தியா, (2010) 6 எஸ்.சி.சி. 457; அசோக்குமார் மகபாய் வாங்கர் -எதிர்- குஜராத் மாநில அரசு, (2011) 10 எஸ்.சி.சி. 604; இராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- லீலா ராம், (2019) 13 எஸ்.சி.சி. 131; பவிசெட்டி காமேஸ்வர ராவ் -எதிர்- ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (2008) 15 எஸ்.சி.சி. 725 மற்றும் விர்சா சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு, ஏ.ஐ.ஆர்.1958 எஸ்.சி. 465 போன்ற இந்நீதிமன்றத்தின் தீர்முடிவுகளைப் பரிசீலித்தது.

3.7. மேற்படி வாதங்களைச் செய்தும், மேற்கூறிய தீர்முடிவுகளைச் சார்ந்தும், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக எதிரியின் தண்டனைத் தீர்ப்பைச் செல்லாததாக்கி, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்யவும், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனைத் தீர்ப்பளித்து விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை மீட்டளித்து, அவருக்கு ஆயுள் சிறைத்தண்டனை அளித்து தண்டிக்கவும் வேண்டுரைக்கப்பட்டுள்ளது.

4. தற்போதைய வழக்கில் இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறினைத் துணைகொண்டு, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக்குற்றமாகாது என்று தீர்மானித்து உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பூரை மற்றும் உத்தரவினை எதிர்மேல்முறையீட்டாளர்-எதிரியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி.நேகா சர்மா ஆதரிக்க முயன்றார்.

4.1. மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்றும், வழக்கு இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறின் கீழ்வரும் என்றும், சுற்றியிருக்கும் சூழ்நிலைகளையும், இதர கருத்துகளையும் பரிசீலித்தபின் உயர் நீதிமன்றத்தால் உறுதியான காரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்றும் எதிரியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் வாதிடப்பட்டுள்ளது.

4.2. எதிரியால் ஒரு சாதாரண மரத்துண்டான "உருட்டுக்கட்டை" தான் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது என உயர் நீதிமன்றத்தால் சரியாகக் கருத்துரைக்கப் பட்டவாறு, இறந்துபோனவரை கொல்வதற்கோ மற்றும்/அல்லது கொலை செய்வதற்கோ குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் ஏதும் முன்ஆலோசனையோ மற்றும்/அல்லது உட்கருத்தோ ஏதும் இருந்தது எனச் சொல்லப்படமுடியாது என்று பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

4.3. மெகந்தி சடங்கில் உணர்ச்சிவேகத்தில் ஏற்பட்ட ஒரு திடீர்ச் சண்டையில் சம்பவம் நிகழ்ந்துவிட்டது என்றும், பயன்படுத்தப்பட்ட ஆயுதமான "உருட்டுக்கட்டை" முக்கியமாக உணவு சமைக்கப்படுவதற்காக விறகுக் கட்டையாகப் பயன்படுத்தப்படுவதாகும் என்றும், மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் உணர்ச்சிவேகத்தில் அந்த "உருட்டுக்கட்டையை" எடுத்து அதைப் பயன்படுத்தியுள்ளார் என்றும், ஆகவே இவ்வழக்கு இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறின் கீழ்வரும் என்றும் உயர் நீதிமன்றம் சரியாகக் கருத்துரைத்து, தீர்மானித்துள்ளது.ஆகவே, உயர் நீதிமன்றம் கொலை என்ற காண்முடிவை, மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்ற ஒன்றாக சரியாக மாற்றியதோடு, தண்டனையை ஆயுள் சிறைத்தண்டனையிலிருந்து பத்து ஆண்டு கால கடுங்காவல் தண்டனையாக சரியாகவே மாற்றியுள்ளது எனப் பணிந்துரைக்கப்பட்டுள்ளது.

4.4. மேற்படியான வாதங்கள் செய்து, இந்த மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்பட்டுள்ளது.

5. நாங்கள், அந்தந்தத் தரப்பினர்களுக்குரிய வாதங்களை விரிவாகக் கேட்டோம்.

எதிரி, வீரேந்திர சிங் என்பவரைக் கொன்றதற்காக விசாரணை நீதிமன்றம், அவருக்கு இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்கு தண்டனையளித்தது என்பது தொடக்கத்திலேயே குறிப்பிடத்தக்கதாகும். சம்பவம் இருவேறு இடங்களில் நடந்துள்ளதைக் காணலாம். முதல் சம்பவம், மெகந்தி சடங்கு நடந்த இடத்தில் எதிரிக்கும், இறந்துபோனவருக்கும் இடையே வாய்ச் சண்டை நடந்ததாகும். அச்சமயத்தில் கிராமத்தினரின் தலையீட்டின் காரணமாக, அவ்விடயம் மேற்கொண்டு செல்லவில்லை.அதன்பிறகு இரண்டாவது சம்பவம் நடு இரவில் சுமார் 12.00

மணியளவில் நடந்தது, எதிரி "உருட்டுக்கட்டையால்" இறந்துபோனவரைத் தாக்கியதோடு, இறந்துபோனவரை பலவாறாக அடித்துத் தாக்கியதை முக்கிய சம்பவமாகச் சொல்லலாம். இறந்துபோனவர் தனது வீட்டை நோக்கி ஓடினார், எதிரியும் அவரைப் பின்தொடர்ந்ததோடு அவருடைய தலை, தொடை போன்றவற்றின் மீது தாக்கினார். ஆகவே, இரண்டாவது சம்பவம், உணர்ச்சி வேகத்தில் எழுந்த ஒரு திடீர்ச் சண்டையில் நிகழ்ந்தது எனச் சொல்ல இயலாது. எதிரி இறந்தவரை நடு இரவில் சுமார் 12.00 மணியளவில் துரத்திச் சென்றார், இறந்தவர் அவரது வீட்டை அடைந்த பின்பாகவுங்கூட, அவரது வீட்டின் முன்பாக எதிரி அவரைத் தாக்கினார், அதனை அவரது மனைவியான அ.சா.1 பார்த்துள்ளார். ஆகையால் அவ்வகையில், மெகந்தி சடங்கில் ஏற்பட்ட ஒரு திடீர்ச் சண்டையில் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தால் சம்பவம் நிகழ்ந்தது என எதிரி சார்பான வழக்கில் கருத்துரைத்ததில் மற்றும்/அல்லது அதனை ஏற்றுக் கொண்டதில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துவிட்டது.இரண்டாவது சம்பவம் மெகந்தி சடங்கின்போது நடந்திருக்கவேயில்லை. இரண்டாவது சம்பவம் இறந்து போனவரின் வீட்டிற்கு அருகே நடந்திருந்தது, அதுவும் முதல் சம்பவம் முடிந்து, அனைவரும் அவரவர் வீட்டிற்குச் சென்றபிறகு, நடு இரவில் 12.00 மணிக்கு இரண்டாவது சம்பவம் நடந்தபோது எதிரி "உருட்டுக்கட்டை"யால் இறந்தவரின் தலை, தொடை போன்றவற்றின் மீது பலவாறாக அடித்தார்.ஆகவே, வழக்கு இ.த.ச., பிரிவு 300-இன் நான்காவது விலக்குக்கூறின் கீழ்வரும் என உயர் நீதிமன்றம் கருத்துரைத்ததில் பிழைபுரிந்துவிட்டது.

5.1.மேலும் மற்றவகையிலுங்கூட, இறந்தவர் அடைந்த பலவாறான காயங்களையும் உயர் நீதிமன்றம் முறையாக மதிப்பிட்டிருக்கவில்லை மற்றும்/அல்லது பரிசீலித்திருக்கவில்லை. மருத்துவச் சான்றின்படி, இறந்தவரின் உடலில் பின்வரும் காயங்கள் காணப்பட்டன:

> "சடலத்தின் புறத்தே ஆராய்ந்ததன்பேரில், பின்வரும் நிலைமைகளும், காயங்களும் காணப்பட்டன:
>
> இரு மேற்புற கால்களில் தொடைகளின் இடைப் பகுதிக்கு கீழ்வரை நீண்டு சராசரியான மரண விறைப்புத்தன்மையும், கண்கள் பகுதியாகத் திறந்தும்,

விழி வெண்படலம் நீர்க்கசிவற்று வறண்டும், மூக்குத்துளைகளில் இரத்தம் உறைந்தும் காணப்பட்டன.

(i) 16 செ.மீ. அளவில் முன் மண்டையோட்டின் முகட்டெலும்பையும், பின் முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்து வரை தையலிடப்பட்டதுடன், இடதுபுற மண்டையோட்டின் மையப்பகுதியில் இருந்து நீண்டு, இடதுபுற மண்டையோடு வரை 34 தையல்களுடன் தையலிடப்பட்ட காயங்கள்.உலோகத் தையல்கள் இடப்பட்டிருந்தன.

(ii) மூச்சுக்குழல் துளைப்பறுவையில் கூரிய மற்றும் தெள்ளத் தெளிவான ஓரப்பகுதிகளுடன் 4 செ.மீ. அளவிலான கிழிந்த காயத்துடன் குரல்வளைக்குள் இருந்த காயத்தில் கசிவு இருந்தது.

(iii) முழங்கால் தண்டில் மூன்றில் இரண்டாம் பாகத்தில் இடதுபுறத்தில் கருநீல நிறத்தில் 1 முதல் 2 செ.மீ. அளவிலான பல அடிபட்ட காயங்கள்.

சடலத்தின் உள்ளுறுப்புகளை ஆராய்ந்ததில் பின்வரும் நிலைமைகளும், காயங்களும் காணப்பட்டன:

(i) மண்டையோடு உடைந்து நெற்றியின் இடது புறத்தில் காயம் இருந்தது.பின்மண்டை எலும்பில் கூரிய தெள்ளத் தெளிவான காயம், தெள்ளத் தெளிவான ஓரப்பகுதியுடன் மண்டையோடு சார்ந்த புறப்பகுதியில் இருந்ததாகக் கூறப்பட்டது.

(ii) மூளை கிழிந்து, முன் மண்டையோட்டில் இரத்தம் உறைந்து காணப்பட்டது.கிழிந்த மூளைக் காயம் முன் மண்டையோடு வரையிலும், கன்னப் பொட்டெலும்பு வரையிலும் நீண்டிருந்தது."

இறந்துபோனவரின் தலையில் ஏற்பட்ட காயங்களே அவரது இறப்புக்கான முக்கிய காரணமாகும்.

5.2. இறந்துபோனவரால் அடையப்பெற்ற மேற்கூறிய பன்முகக் காயங்களிலிருந்து, எதிரி "உருட்டுக்கட்டையை" இடதுபுற முன் மண்டைப்பகுதி

உடையுமளவுக்கு அத்தகைய ஒரு வேகத்துடன் பயன்படுத்தினார்; 16 செ.மீ. அளவில் முன் மண்டையோட்டின் முகட்டெலும்பையும், பின் முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்து வரை தையலிடப்பட்டதுடன், இடதுபுற மண்டையோட்டின் மையப் பகுதியிலிருந்து நீண்டு இடதுபுற மண்டையோடு வரை 34 தையல்களுடன் தையலிடப்பட்ட காயங்கள்; மூளை கிழிந்து, முன் மண்டையோட்டில் இரத்தம் உறைந்து காணப்பட்டது; கிழிந்த மூளைக் காயம் முன் மண்டையோடு வரையிலும், கன்னப்பொட்டெலும்பு வரையிலும் நீண்டிருந்தது; ஆகவே, அத்தகையதொரு வேகமுடன் கொடுங்காயங்கள் விளைவிக்கப்பட்டிருந்ததால், எதிரி எவ்வாறு இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறின் பலனைப் பெறுவார்? வழக்கு இ.த.ச., பிரிவு 300-க்கான மூன்றாவது மற்றும்/அல்லது நான்காவது விலக்குக்கூறுகளுக்குள்தான் நிச்சயமாக வரும்.

6. மேற்படியான சங்கதித் தொகுப்பின் அடிப்படையில் மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றமாகுமா? இல்லையா? என்ற கூறின்பேரிலான இந்நீதிமன்றத்தின் சில தீர்முடிவுகள் குறிப்பிடப்பட்டு, பரிசீலிக்கப்படவேண்டியுள்ளன.

அ) *விர்சா சிங்* (மேற்படி) என்ற வழக்கில் 16 மற்றும் 17-ஆவது பத்திகளில் கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டதாவது:

> "16. ... சிறைக் கைதி ஒரு கொடுங்காயத்தை அல்லது சாதாரணமான ஒன்றை விளைவிக்க எண்ணினாரா? என்பது கேள்வி அல்ல என்றாலும், அவர் மெய்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு காயத்தை விளைவிக்க எண்ணினாரா? என்பதாகும். அவர் அவ்வாறு எண்ணவில்லை எனக் காட்டினாரென்றால் அல்லது ஒட்டுமொத்த சூழ்நிலைகளும் அத்தகையதொரு முடிவை நியாயப்படுத்துமெனில், ஐயத்திற்கிடமின்றி அந்தப் பிரிவு வேண்டுறுத்துகின்ற உட்கருத்து மெய்ப்பிக்கப்பட வில்லை என்பதாகும். ஆனால், காயத்தை மட்டுமே விளைவித்து, அதை மேல்முறையீட்டாளர்தான் விளைவித்தார் என்றால், அவர் அதை விளைவிக்க எண்ணம் கொண்டிருந்தார் என்ற ஒரே முடிவுதான் சாத்தியமாகும். இங்கோ, அங்கோ அவர் அதன் கடுமையையும் அறிந்திருக்கவில்லை அல்லது கடுமையான பின் விளைவுகளையும்

எண்ணிப்பார்க்கவில்லை. உட்கருத்து என்பதைப் பொறுத்தவரையில், அவர் கொல்வதற்கு அல்லது ஒரு குறிப்பட்ட அளவு கொடுமையான காயத்தை விளைவிப்பதற்கு எண்ணினாரா?என்பது கேள்வியல்ல என்றாலும், அவர் பிரச்சினைக்குரிய காயத்தை விளைவிக்க எண்ணினாரா?என்பதாகும்; மேலும், காயமிருப்பது மெய்ப்பிக்கப்படுமானால், சான்றோ அல்லது ஒரு மாறான முடிவைக் கோரும் சூழ்நிலைகளோ இருந்தாலன்றி, அதை விளைவிக்கும் உட்கருத்து கொண்டிருந்ததாகவே அனுமானிக்கப்படும். உட்கருத்து இருந்ததா?இல்லையா?என்பது ஒரு சங்கதியேயன்றி, அது ஒரு சட்டம் அல்ல. காயம் கடுமையானதாக இருந்தாலும், இல்லையென்றாலும், அது கடுமையாக இருந்தால், எவ்வாறு கடுமையானது என்பது முற்றிலும் ஒரு தனிப்பட்டதும், மாறுபட்டதுமான வினாவாகும், மேலும், சிறைக்கைதி, பிரச்சினைக்குரிய காயத்தை விளைவிக்க எண்ணங்கொண்டிருந்தாரா?என்ற கேள்வி எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை.

17. இக்குறிப்பிட்ட வழக்கில், காயத்தின் கடுமையுடன் விசாரணையைத் தொடர்புபடுத்தலாம் என்பது உண்மை. எடுத்துக்காட்டாக, சிறைக் கைதி மேலோட்டமாக ஒரு கீறல்கோடு போடவே எண்ணங் கொண்டார் என்பதும், ஆனால், அவரால் பாதிக்கப்பட்டவர் எதிர்பாராமல் நிலைதடுமாறி பயன்படுத்தப்பட்ட வாள் அல்லது ஈட்டி மீது விழுந்து விட்டார் என்பதுமான ஒரு முடிவு மெய்ப்பிக்கப்படுமானால் அல்லது அந்த ஒட்டுமொத்த சூழ்நிலைகளும் நியாயப்படுத்தப்படுமானால், அக்குற்றம் நிச்சயமாகக் கொலைக் குற்றம் அல்ல; ஆனால், சிறைக் கைதி தான் விளைவிக்க எண்ணிய காயத்தை விளைவிக்கவில்லை என்றாலும், அது கடுமையானதாக மாறிவிட்டது என்றாலும், அவர் பிரச்சினைக்குரிய காயத்தை விளைவிக்க எண்ணம் கொண்டிருக்கவே இல்லை என்பதல்ல.அத்தகையதொரு நேர்வில் முற்றிலும் வேறான ஒரு காயத்தை விளைவிப்பதே அவரது உட்கருத்தாக இருந்திருக்கக்கூடும்.இந்த வேறுபாடு ஒரு சட்டம் அல்ல என்றாலும், அது ஒரு சங்கதியாகும்; ..... "

(வலியுறுத்தப்பட்டது)

ஆ) தீரஜ்பாய் கோரக்பாய் நாயக் என்ற வழக்கில் இ.த.ச., பிரிவு 300-க்கான 4-ஆவது விலக்குக்கூறின் பொருந்துகையின் அடிப்படையில் 11-ஆவது பத்தியில் கருத்துரைத்து தீர்மானிக்கப்பட்டதாவது:

"11. இ.த.ச., பிரிவு 300-இன் நான்காவது விலக்குக்கூறு ஒரு திடீர்ச் சண்டையில் விளையும் செயல்களை உள்ளடக்குகிறது. மேற்படி விலக்குக்கூறு, முதல் விலக்குக்கூறில் உள்ளடக்கப்படாத குற்ற வழக்கு (மேற்படி ஆத்திரமடைதல்) குறித்து விவாதிக்கிறது; அதற்குப்பின் அதற்குரிய இடம் மிகவும் பொருத்தமாக உள்ளது. விலக்குக்கூறு ஒரே கோட்பாட்டின் அடிப்படையிலானது, இரண்டிலும் முன் ஆலோசனை இல்லை. ஆனால், 1-ஆவது விலக்குக்கூறு சுயக் கட்டுப்பாடு முற்றிலும் இல்லாதேபாது, 4-ஆவது விலக்குக்கூறு என்பது மனிதர்களின் உணர்ச்சி வேகத்தில் அவர்களின் அறிவை மழுங்கடித்து அவர்கள் சாதாரணமாக செய்யத் துணியாத செயல்களை அவர்களைச் செய்யத் தூண்டுதல் குறித்ததேயாகும். 1-ஆவது விலக்குக் கூறில் உள்ளவாறு 4-ஆவது விலக்குக்கூறில் ஆத்திரமடைதல் உள்ளது, ஆனால், விளைவிக்கப்பட்ட காயம் அந்த ஆத்திரத்தின் நேரடி விளைவல்ல. உண்மையில், ஓர் அடி அடித்திருந்தாலும் அல்லது பூசலின் ஆரம்பத்தில் சிறிது ஆத்திரம் இருந்தபோதிலும் அல்லது எந்த வழியிலாவது சண்டை ஆரம்பித்திருந்தாலும், இருதரப்பினர்களின் பிந்தைய நடத்தைதான் அவர்களுக்கான குற்றத்தைச் சமநிலைப்படுத்துகிறது. ஒரு "திடீர்ச் சண்டை" என்பது ஒவ்வொரு தரப்பும் ஒருவருக்கொருவர் ஆத்திரமடைந்து தாக்கிக்கொள்வதாகும். ஒரு தரப்பின் ஆத்திரம் காரணமாகப் புரியப்பட்ட கொலை எளிதாகக் கண்டுபிடிக்கத்தக்கதல்ல; அத்தகைய நேர்வுகளில், ஒரு தரப்பினர் மீது மொத்தக் குற்றத்தையும் சுமத்திவிடவும் இயலாது. அப்படியிருக்கிறபோது, மிகவும் பொருத்தமான விலக்குக்கூறு, 1-ஆவது விலக்குக்கூறேயாகும்.சண்டையிடுவதற்கான முன் ஆலோசனையோ முடிவோ இல்லை.திடீரென ஒரு சண்டை நடந்தால், அதற்கு இரு தரப்பினர்களுமே குற்றஞ்சாட்டப்படத்-தக்கவர்களாவர். அவர்களுள் ஒருவர் சண்டையை ஆரம்பித்திருக்கலாம்,

அதனால் மற்றொருவரின் சுயக் கட்டுப்பாட்டினால் சினத்தை அடக்கியதால் அது தீவிரமடையாமல் இருந்திருக்கலாம். பின்னர் ஒருவருக்கொருவர் ஆத்திரமூட்டுவதும், சினமடைவதுமாக இருக்கிறபோது ஒவ்வொரு சண்டைக்காரருக்கும் குற்றத்தைப் பகிர்ந்தளிப்பது சிரமமாகும். (அ) முன் ஆலோசனையின்றியும், (ஆ) ஒரு திடீர்ச் சண்டையிலும், (இ) குற்றவாளிகள் தகாத அனுகூலம் எடுத்துக் கொள்ளாமலும் அல்லது கொடுரமான அல்லது அசாதாரண முறையில் செயல்படாமலும், (ஈ) சண்டையில் நபர் ஒருவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையிலும் இறப்பு ஏற்பட்டிருந்தால் 4-ஆவது விலக்குக்கூறின் உதவியைக் கோரலாம். 4-ஆவது விலக்குக்கூறுக்குள் ஒரு வழக்கைக் கொண்டுவருவதற்கு, அதில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆக்கக்கூறுகளும் இருக்கவேண்டும்.இ.த.ச., பிரிவு 300-க்கான 4-ஆவது விலக்குக்கூறில் காணப்படும் "சண்டை" இ.த.ச.-இல் பொருள் வரையறுக்கப்படவில்லை. ஒரு சண்டையிடுவதற்கு இருவர் வேண்டும். உணர்ச்சிவேகம் என்பது உணர்ச்சியை நொடிப்பொழுதில் மட்டுப்படுத்தப்பட முடியாததாகும், மேலும் இவ்வழக்கில், தரப்பினர்கள் ஆரம்பத்தில் ஏற்பட்ட வாய்ச்சண்டையின் காரணமாக மிகுந்த கோபத்திற்குள்ளாகிவிட்டிருந்தனர். ஒரு சண்டை என்பது இருவருக்கும் மேற்பட்ட நபர்களுக்கு இடையே ஆயுதங்களுடனோ, ஆயுதங்களின்றியோ நடக்கும் போராட்டம் ஆகும். எது ஒரு திடீர்ச் சண்டையாகக் கருதப்படும் என்பதற்கான பொது விதி எதனையும் குறிப்பிடுவது சாத்தியமல்ல. இது ஒரு சங்கதிசார்ந்த பிரச்சினையாகும். ஒரு சண்டை திடீரென ஏற்பட்டதா? இல்லையா? என்பது ஒவ்வொரு வழக்கின் மெய்ப்பிக்கப்பட்ட சங்கதிகளின்மீது இன்றியமையாதளவில் சார்ந்திருக்கும். 4-ஆவது விலக்குக்கூறைப் பயன்படுத்துவதற்கு, அங்கு திடீர்ச் சண்டை ஏற்பட்டது என்றும், அங்கு முன் ஆலோசனை இல்லை என்றும் காண்பிப்பது மட்டும் போதுமானதல்ல. மேலும், குற்றவாளி தகாத அனுகூலம் எடுத்துக்கொள்ளவில்லை அல்லது கொடுரமான அல்லது அசாதாரண முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதும்

காண்பிக்கப்பட வேண்டும்.வகையத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "தகாத அனுகூலம்" என்ற சொல்லமைப்பு "தகாத பயன்" என்று பொருள்பெறுகிறது."

இ) புலிசேர்ல நாகராஜூ என்ற வழக்கில் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்பதையும், மரணம் விளைவிப்பதற்கான உட்கருத்தினையும் இந்நீதிமன்றம் பரிசீலிக்கும் வாய்ப்பு பெற்றிருந்தது. மரணம் விளைவிப்பதற்கான உட்கருத்து என்பது பொதுவாக பின்வரும் ஒருசில அல்லது பல சூழ்நிலைகளைச் சேர்த்து முடிவு செய்வதாகும் என இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது: (i) பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் தன்மை; (ii) ஆயுதம் எதிரியால் எடுத்துவரப்பட்டதா? அல்லது அந்த இடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதா?; (iii) உடலின் முக்கியப் பகுதியில் குறிவைத்து தாக்கப் பட்டதா?; (iv) காயத்தை விளைவித்தலில் வேகவீச்சின் அளவு; (V) ஒரு செயல் ஒரு திடீர்ச் சண்டையில் அல்லது திடீர்த் தகராறில் அல்லது கட்டற்ற சண்டையில் நடந்ததா? (vi) சம்பவம் சந்தர்ப்பவசமாக நடந்ததா?அல்லது முன் ஆலோசனையின்றி நடந்ததா?; (vii) முன்விரோதம் ஏதும் இருந்ததா?அல்லது இறந்தவர் ஓர் அயலாளா?; (viii) மிகக் கடுமையான திடீர் ஆத்திரம் ஏதும் ஏற்பட்டதா? அப்படியானால், அந்த ஆத்திரத்திற்கான காரணம்; (ix) அது உணர்ச்சி வேகத்தில் நடந்ததா?; (x) காயம் விளைவித்த நபர் தகாத அனுகூலம் எடுத்துக்கொண்டாரா? அல்லது கொடுரமான மற்றும் அசாதாரண முறையில் நடந்து கொண்டாரா?; (xi) எதிரி ஒரேயொருமுறை தாக்கினாரா?அல்லது பலமுறை தாக்கினாரா ?. 29-ஆவது பத்தியில் கருத்தறிவித்ததாவது:

"29. ஆகவே, வழக்கு, பிரிவு 302 அல்லது 304, பகுதி 1 அல்லது 304, பகுதி II-இன் கீழ் வருகிறதா?என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க இருப்பதால், அது கவனமுடனும் விழிப்புடனும் முக்கியமான பிரச்சினையான உட்கருத்து குறித்து தீர்மானிக்க முனையவேண்டும்.சிறிய அல்லது அற்பமான பல விடயங்களான, பழத்தைப் பறித்தல், கால்நடைகளை மேயவிடுதல், குழந்தைகளின் சண்டை, அநாகரிகமாகப் பேசுதல் அல்லது ஆட்சேபிக்கத்தக்க பார்வையுங்கூட வாய்ச் சண்டைகளுக்கும், இனக்

கலவரங்களுக்கும் வழிவகுத்து மரணத்தில் முடியலாம்.அத்தகைய வழக்குகளில் பழிவாங்குதல், பேராசை, பொறாமை அல்லது சந்தேகம் போன்ற சாதாரண உள்நோக்கங்கள் முற்றிலும் இல்லாதிருக்கலாம். அங்கு உட்கருத்து இல்லாதிருக்கலாம்.முன் ஆலோசனை இல்லாதிருக்கலாம். உண்மையில் குற்றமுறு தன்மையுங்கூட இல்லாதிருக்கலாம். இவ்விடயத்தின் மறுபக்கத்தைப் பார்த்தோமானால், எதிரி, கொலைக் குற்றத்திற்கான தண்டனையைத் தவிர்க்க முயற்சி செய்யும் பொருட்டு மரணம் விளைவிப்பதற்கு உட்கருத்து ஏதுமில்லை என்பதாக வழக்கைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிற கொலைக் குற்ற வழக்குகளும் இருக்கலாம். பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க கொலைக் குற்ற வழக்குகள், பிரிவு 304, பகுதி I/II-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களாக மாற்றப்படாது அல்லது மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றமாகாது எனும் வழக்குகளும் பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க கொலைக்குற்ற வழக்காகக் கருதப்படும் என்பதை நீதிமன்றங்கள்தான் உறுதிப்படுத்தவேண்டும். மரணம் விளைவிப்பதற்கான உட்கருத்து என்பது பொதுவாக பின்வரும் ஒருசில, பல சூழ்நிலைகளைச் சேர்த்து முடிவு செய்வதாகும் என இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது: (i) பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தின் தன்மை; (ii) ஆயுதம் எதிரியால் எடுத்துவரப்பட்டதா?அல்லது அந்த இடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டதா?; (iii) உடலின் முக்கியப் பகுதியில் குறிவைத்து தாக்கப்பட்டதா?; (iv) காயத்தை விளைவித்தலில் வேகவீச்சின் அளவு; (v) ஒரு செயல் ஒரு திடீர்ச் சண்டையில் அல்லது திடீர்த் தகராறில் அல்லது கட்டற்ற சண்டையில் நடந்ததா?; (vi) சம்பவம் சந்தர்ப்பவசமாக நடந்ததா?அல்லது முன் ஆலோசனையின்றி நடந்ததா ?; (vii) முன்விரோதம் ஏதும் இருந்ததா? அல்லது இறந்தவர் ஓர் அயலாளா? (viii) மிகக் கடுமையான திடீர் ஆத்திரம் ஏதும் ஏற்பட்டதா? அப்படியானால் அந்த ஆத்திரத்திற்கான காரணம்; (ix) அது உணர்ச்சி வேகத்தில் நடந்ததா?; (x) காயம் விளைவித்த நபர் தகாத அனுகூலம் எடுத்துக்கொண்டாரா? அல்லது கொடுரமான மற்றும் அசாதாரண முறையில் நடந்துகொண்டாரா?; (xi)

எதிரி ஒரேயொருமுறை தாக்கினாரா?அல்லது பலமுறை தாக்கினாரா? மேற்படி பட்டியலிடப்பட்டுள்ள சூழ்நிலைகள் நிச்சயமாக விரிவானதல்ல என்றாலும், உட்கருத்து என்ற பிரச்சினையைத் தெளிவுற விளக்கும் தனி வழக்குகளில் வேறுபல சிறப்புச் சூழ்நிலைகளும் இருக்கலாம். அது அப்படியே இருக்கட்டும்."

ஈ) (மேற்படி) சிங்கபாகு அஞ்சய்யா என்ற வழக்கில் இதேபோன்ற சங்கதிகளிலும், சூழ்நிலைகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர் இறந்துபோனவரின் மரணத்தை விளைவிக்க எண்ணங்கொண்டிருந்ததாக முடிவு செய்து கருத்துரைத்துள்ளதாவது: பத்தி 16-வது பத்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"16. எங்களது கருத்துப்படி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் உட்கருத்தை அறிய அவரது சிந்தைக்குள் எவரும் செல்ல இயலாது என்பதால், அதனை, அவர் பயன்படுத்திய ஆயுதம், தாக்குவதற்காக அவர் தேர்ந்தெடுத்த உடற்பகுதி, விளைவிக்கப்பட்ட காயங்களின் தன்மை ஆகியவற்றைக்கொண்டு முடிவு செய்துகொள்ளலாம்.இங்கு, மேல்முறையீட்டாளர், குற்றத்திற்கான ஆயுதமாக ஒரு கடப்பாரையை எடுத்துக்கொண்டார்.மேலும், அவர் காயம் விளைவிப் பதற்கு உடலின் முக்கியப் பகுதியான தலையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, மண்டையோட்டில் பன்முக எலும்புமுறிவுகளை விளைவித்துள்ளார். மேல்முறையீட்டாளர் எவ்வளவு விசைவேகத்துடன் ஆயுதத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்பதை இது தெளிவாகக் காண்பிக்கிறது.இந்த ஒட்டுமொத்தக் காரணிகள் அனைத்தும், மேல்முறையீட்டாளர், இறந்துபோனவரின் மரணத்தை விளைவிக்க எண்ணங்கொண்டிருந்தார் என்ற ஒரேயொரு முடிவுக்கே பெரிதும் இட்டுச்செல்கிறது. "

உ) (மேற்படி) கன்ஹய்யா லால் என்ற வழக்கில், 7.4 மற்றும் 7.5-ஆவது பத்திகளில், இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டதாவது:

7.4. அசோக்குமார் மகபாய் வாங்கர் [அசோக்குமார் மகாபாய் வங்கர் -எதிர்- குஜராத் மாநிலம், (2011) 10 எஸ். சி. சி. 604] என்ற வழக்கில்,

இறந்துபோனவரின் தலையில் மர உலக்கையால் ஒரேயொருமுறை தாக்கப்பட்டதால் மரணம் ஏற்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர், இறந்தவரின் தலை சின்னாபின்னமாக உடைந்துபோகும் அளவுக்கு அத்தகைய விசைவேகத்துடன் உலக்கையால் தாக்கியுள்ளதாகக் கண்டறியப்பட்டது. இவ்வழக்கு இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் அல்லது பிரிவு 300-க்கான 4-ஆவது விலக்குக்கூறின் கீழ் வருமா?என்பதை இந்நீதிமன்றம் பரிசீலித்தது. இறந்தவர் அடைந்த காயம், பலியானவரின் இறப்பை விளைவித்ததில் குற்றம் சாட்டப்பட்டவரின் உட்கருத்தைக் காட்டியதோடன்றி, இதுகுறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்தே இருந்தார் என்றும் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், அத்தாக்குதல் பலியானவரின் இறப்பை விளைவிப்பதற்காகத்தானேயன்றி வேறு எதற்குமில்லை என்றும் இந்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்-பட்டுள்ளது. உடலின் முக்கியப் பகுதியில் அத்தகையதொரு ஆயுதத்தைக் கொண்டு அத்தகைய காயத்தை விளைவித்தால் மரணம் ஏற்படும் என்னும் முடிவுக்குத்தான் எந்தவொரு பகுத்தறிவான மனிதனும் வருவான் என்று கற்பனைக்கிடமின்றி கருத்துரைக்கப்பட்டுள்ளது.

7.5. லீலா ராம் (இராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- லீலா ராம் (2019) 13 எஸ்.சி.சி. 131) என்ற வழக்கின் சமீபத்திய தீர்முடிவில் இந்நீதிமன்றத்தால் இதேபோன்றதொரு கருத்து எடுக்கப்பட்டுள்ளது; மேலும் கையிலுள்ள பிரச்சினையின் பேரில் அதாவது, ஒரேயொரு தாக்குதல் என்னும் நேர்வில், அவ்வழக்கு பிரிவு 302 அல்லது பிரிவு 304, பகுதி I அல்லது பிரிவு 304, பகுதி II-இன் கீழ் வருமா? என்பதன்பேரில் இந்நீதிமன்றத்தின் தொடர் தீர்முடிவுகளைப் பரிசீலித்த பிறகு, இந்நீதிமன்றம் (லீலா ராம் -எதிர்- இராஜஸ்தான் மாநில அரசு, 2008 எஸ்.சி.சி. ஆன்லைன் இராஜஸ்தான் 945] -இன் தீர்ப்புரையை மாற்றியமைத்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்கான தண்டனை வழங்கியது. அதே தீர்முடிவில், இந்நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 300-க்கான 4-ஆவது விலக்குக்கூறையும் பரிசீலித்து, 19-ஆவது பத்தியில் கருத்துரைத்ததாவது:

(லீலா ராம் என்ற வழக்கு, (இராஜஸ்தான் மாநில அரசு -எதிர்- லீலா ராம் (2019) 13 எஸ்.சி.சி. 131, பக்கங்கள் 140-41)

> "19. ..... 4-ஆவது விலக்குக்கூறின் கீழ், அந்த வகையத்தில் அடங்கியுள்ள வரையறைகள் நிறைவுசெய்யப்படுமானால், மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றமாகாது.அவையாவன:(i) அச்செயல் முன் ஆலோசனையின்றி புரியப் படுதல்; (ii) ஒரு திடீர்ச் சண்டையாக இருத்தல்; (iii) அச்செயல் ஒரு திடீர்த் தகராறின்பேரில் உணர்ச்சி வேகத்திலானதாக இருத்தல் வேண்டும்; மற்றும் (iv) குற்றவாளி தகாத அனுகூலம் எடுத்திருக்காமலும் அல்லது கொடுரமான அல்லது அசாதாரண முறையிலோ செயல்பட்டிருக்கக் கூடாது. ""

7. கையிலுள்ள வழக்கின் சங்கதிகளுக்கு மேற்கூறிய தீர்முடிவுகளில் இந்த நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்தியும், எதிரி உடலின் முக்கியப் பகுதியான தலையின் மீது பலமுறை தாக்குதல்/பன்முகத் தாக்குதல் நடத்தியதால் கொடுங்காயங்கள் ஏற்பட்டன; மேலும், அவர் மண்டையோட்டில் எலும்பு முறிவு ஏற்படும் அளவுக்கு அத்தகைய விசைவேகத்துடன் "உருட்டுக் கட்டையைப்" பயன்படுத்தியுள்ளதால், இடதுபுற நெற்றிக் காயமும், 16 செ.மீ. அளவில் முன் மண்டையோட்டின் முகட்டெலும்பையும், பின் முகட்டெலும்பையும் இணைக்கும் பொருத்து வரை தையலிடப்பட்டதுடன் இடதுபுற மண்டையோட்டின் மையப்பகுதியிலிருந்து நீண்டு, இடதுபுற மண்டையோடு வரை 34 தையல்களுடன் காயங்கள் ஏற்பட்டன என்னும் சங்கதியைக் கொண்டும், இவ்வழக்கு இ.த.ச., பிரிவு 300-இன் மூன்றாவது மற்றும் நான்காவது கூறுகளின் கீழ்வரும் என நாங்கள் கருதுகிறோம். இ.த.ச., பிரிவு 300-இன் மூன்றாவதும், நான்காவதுமான கூறுகளாவன:

> "மூன்றாவதாக, எவருக்கேனும் உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அது செய்யப்பட்டு, உண்டாக்கக் கருதிய அந்த உடற்காயமானது, இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணத்தை ஏற்படுத்துவதற்குப் போதுமானதாக இருக்கிறது என்றால், அல்லது

நான்காவது, அந்தச் செய்கையைச் செய்கின்றவர், அது, பெரும்பாலும் உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவே செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ, மேற்சொன்னவாறான அத்தகைய காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமின்றி அத்தகைய செய்கையைச் செய்வாரானால். '"

ஆகவே, இ.த.ச., பிரிவு 300-இன்படி, வழக்கு, இ.த.ச., பிரிவு 300-க்கான மூன்றாவது மற்றும் நான்காவது கூறுகளுக்குள் வருமானால், மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமே எனக் கூறலாம்.ஆகவே, இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறைப் பயன்படுத்தி மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமல்ல எனக் கருத்துரைத்ததில் பெரும் பிழைபுரிந்து விட்டது.இதில் இதற்கு மேலே கருத்துரைக்கப்பட்டவாறு, மெகந்தி சடங்கில் முதல் சம்பவமான வாய்ச்சண்டை நடந்து முடிந்தபின்னர், அன்றிரவு 12.00 மணிக்கே அந்த முக்கியமான இரண்டாவது சம்பவம் நடந்துவிட்டது என்னும் சங்கதியைக் கருத்திற்கொண்டு பார்த்தால், உயர் நீதிமன்றத்தால் இ.த.ச., பிரிவு 300-க்கான நான்காவது விலக்குக்கூறு பயன்படுத்தப்பட்டிருக்கவே கூடாது என்பதாகும். உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு சங்கதிகளின்பேரிலும், சட்டத்தின்பேரிலும் நிலைநிறுத்தத்தக்கதல்ல.

8. மேற்படியானவற்றைக் கருத்திற்கொண்டும், மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவும், இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.இக்கொலைக் குற்றம், மரணம் விளைவிக்கும் கொலைக் குற்றமாகாது என்ற காண்முடிவு மாற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து ஆயுள் சிறைத் தண்டனை 10 ஆண்டுகால கடுங்காவல் தண்டனையாக மாற்றப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையும், உத்தரவும் இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டு, நீக்கறவு செய்யப்படுகிறது.எதிர்மேல்முறையீட்டாளரான எதிரி, இறந்துபோன வீரேந்திர சிங்கை கொன்றதற்காக மற்றும்/அல்லது கொலை புரிந்ததற்காக இ.த.ச., பிரிவு 302-இன் கீழான

குற்றத்திற்காக குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, அவர் ஆயுள் சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கான தண்டனை அளிக்கப்படுகிறது.அதற்கேற்ப, எதிரிக்கு, இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றத்திற்காக ஆயுள் சிறைத்தண்டனைத் தீர்ப்பளித்து, விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு இதன்மூலம் மீட்டளிக்கப்படுகிறது.

.... மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா

.... மாண்புமிகு நீதியரசர் திரு. பி.வி. நாகரத்னா

புதுதில்லி;

பிப்ரவரி 04, 2022.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "